அவளே தமிழீழ மரத்தி
அண்ணன் பிரபா தங்கையில் ஒருத்தி
தளபதி விதுசா என்னும் தமிழ் தீ 2

மாலதி படையணி நடத்தியே சென்றாள்
ஈழ மண்மீட்க்கும் போரிலே பல முறை வென்றாள் 2
பெண் என்றால் இளிவென்ற நிலையினை உடைத்தாள்
அடபெரியே கணையாக களம் சென்று வெடித்தாள் 2

அவளே தமிழீழ மரத்தி
அண்ணன் பிரபா தங்கையில் ஒருத்தி
தளபதி விதுசா என்னும் தமிழ் தீ 2

கண் திரை சிவக்கவே நெருப்பாக விழித்தாள்
கொடும் காடையன் சாகவே எறிகணை கொடுத்தாள் 2
பெண்ணென்றால் நெருப்பென்று வரலாறு படைத்தாள்
தமிழ் பேராண்மை புலியாய் சிங்களனை அடித்தாய் 2

அவளே தமிழீழ மரத்தி
அண்ணன் பிரபா தங்கையில் ஒருத்தி
தளபதி விதுசா என்னும் தமிழ் தீ 2

மாவீரர் ஆகுமுன் படையணியை அழைத்தாள்
மறுபடி சிறப்பான போர்பயிற்ச்சி கொடுத்தாள் 2
வென்றாவோம் என்றவள் இறுதியாய் உரைத்தாள்
பெரு விருப்பமாய் கன்னத்தில் முத்தங்கள் பதித்தாள் 2

அவளே தமிழீழ மரத்தி
அண்ணன் பிரபா தங்கையில் ஒருத்தி
தளபதி விதுசா என்னும் தமிழ் தீ 2

தணல் கக்கும் எறீகணை ஏந்தியே கொதித்தாள்
வன் காடயரை ஊடறுக்க வெடி கட்டி குதித்தாள் 2
நச்சுவளி வெடிவீச்சில் விதையாகி விழுந்தாள்
என்றும் வணங்காத மண்ணாக விதுசாவே எழுந்தாள்

அவளே தமிழீழ மரத்தி
அண்ணன் பிரபா தங்கையில் ஒருத்தி
தளபதி விதுசா என்னும் தமிழ் தீ 2